# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2018-2019

## முன்னுரை

தமிழ்நாட்டின் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகை 7.21 கோடியாகும். அதில் ஆதி திராவிடர் இன மக்கள் 1.44 கோடியும் (20.01%), பழங்குடியின மக்கள் 7.95 இலட்சமும் (1.10%) இருக்கின்றனர். இவ்வின மக்கள் சந்திக்கும் இடையூறுகள், அவர்களின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து சமூகத்தின் இதர பிரிவினர்களுக்கு இணையாக அவர்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் மேம்படுத்துவதே இத்துறையின் முதன்மையான குறிக்கோளாகும்.

மாநில அரசின் சீரிய கொள்கைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக, ஒட்டுமொத்த கொள்கையை உருவாக்கி, நலத்திட்டங்களை தீட்டி, செயல்படுத்துவதன் மூலம், அவர்களின் சமூக,

பொருளாதார வளர்ச்சி, கல்வி முன்னேற்றம் போன்றவற்றில் நிரந்தர மேம்பாட்டையும், சமூக உயர்வையும் உறுதிப்படுத்துவதில் இத்துறை முனைப்புடன் செயல்படுகிறது. இம்மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்திட, 2018-2019ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் **ரூ.3549.65 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்வியால் மட்டுமே ஒரு சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்ற கருத்தியலை முதன்மையாகக் கொண்டு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றம் மற்றும் உரிமையை நிலைநாட்ட இத்துறை பெரு முயற்சி மேற்கொள்கிறது.

2018-19ஆம் நிதியாண்டில் வரவு–செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.3549.65 கோடியில், கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ரூ.3237.84 கோடி (91 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளின் விவரம்

| வ. எண். | விவரம் | எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர் நலப்பள்ளிகள் | 1,134 | 98,246 |
| 2 | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 315 | 27,941 |
| | **மொத்தம்** | **1,449** | **1,26,187** |

## I. ஆதி திராவிடர் நலன்

பிற மாநிலங்களில் பட்டியல் இனத்தவர் எனவும், தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் எனவும் குறிப்பிடப்படும் இம்மக்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், அனைத்து வகையான விலக்கல், ஒதுக்குதல், தீண்டாமை மற்றும் பாகுபாடு போன்றவற்றை களையவும், சமூக சமத்துவத்திற்கான உரிமையை உறுதிப்படுத்தவும், அரசு பல கொள்கைகள், திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி வருகிறது.

மேலும், நவீன தமிழகத்தில் கிராமப்புறங்களில் வசிக்கும் ஆதி திராவிடர்களின் பெருகிவரும் இடர்பாடுகளை எதிர்கொள்ள பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் மானியத்துடன் கூடிய வேறுபட்ட அளவிலான கடன்கள் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், வணிக நிறுவனங்களை அமைக்கவும், விவசாய நிலம் வாங்குவதற்காகவும் வழங்கப்படுவதுடன், வீடு கட்டும் நோக்கத்திற்காக இலவச வீட்டு மனைகளும் வழங்கப்படுகின்றன.

## தமிழ்நாட்டில் உள்ள ஆதி திராவிடர் இனங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணைகள் (திருத்தம்) சட்டம் 1976–இன்படி, தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட 76 சாதிகள் ஆதி திராவிடர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. அவை, (1) ஆதி ஆந்திரா (2) ஆதி திராவிடா (3) ஆதி கர்நாடகா (4) அஜிலா (5) அருந்ததியர் (6) அய்யனாவர்* (7) பைரா (8) பகூடா (9) பண்டி (10) பெல்லாரா (11) பரதர்* (12) சக்கிலியன் (13) சாலவாடி (14) சாமர், முச்சி (15) சண்டாளா (16) செருமான் (17) தேவேந்திரகுலத்தான் (18) டோம், தொம்பரா, பைதி, பானோ (19) டொம்பன் (20) கொடகலி (21) ஹொட்டா (22) கொசங்கி (23) ஹொலியா (24) ஜக்காலி (25) ஜம்புவுலு (26) கடையன் (27) கக்காலன்*

(28) கல்லாடி (29) கணக்கன், பாடண்ணா (நீலகிரி மாவட்டம்) (30) கரிம்பாலன் (31) கவரா* (32) கோலியன் (33) கூசா (34) கூத்தன், கூடன்* (35) குடும்பன் (36) குறவன், சித்தனார் (37) மாதாரி (38) மாதிகா (39) மைலா (40) மாலா (41) மன்னான்* (42) மாவிலன் (43) மோகர் (44) முண்டலா (45) நலகேயவா (46) நாயாடி (47) பாடண்ணன்* (48) பகடை (49) பள்ளன் (50) பள்ளுவன் (51) பம்பாடா (52) பாணன்* (53) பஞ்சமா (54) பன்னாடி (55) பன்னியாண்டி (56) பறையன், பறயன், சாம்பவர் (57) பரவன்* (58) பதியன்* (59) புலையன், சேரமார் (60) புதிரை வண்ணான் (61) ராணேயர் (62) சாமாகாரா (63) சாம்பன் (64) சபரி (65) செம்மான் (66) தாண்டன்* (67) தோட்டி (68) திருவள்ளுவர் (69) வல்லோன் (70) வள்ளுவன் (71) வண்ணான்* (72) வாதிரியான் (73) வேலன் (74) வேடன்* (75) வெட்டியான் (76) வேட்டுவன்*.

***(கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)***

## கல்வி

கல்வியில் முன்னேற்றம் அடையச் செய்யும் பொருட்டு ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1134 பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## பள்ளிகளின் விவரம்

| விவரம் | பள்ளிகள் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| தொடக்கப் பள்ளி | 836 | 37,282 |
| நடுநிலைப் பள்ளி | 96 | 9,611 |
| உயர்நிலைப் பள்ளி | 117 | 14,669 |
| மேல்நிலைப் பள்ளி | 85 | 36,684 |
| **மொத்தம்** | **1,134** | **98,246** |

## 1. **கல்வி உதவித்தொகைகள்**

ஆதி திராவிடர் மக்கள் பெரும்பாலும் விவசாயம் சார்ந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது வாழ்க்கை நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதனால் கல்வி நிறுவனங்களால் விதிக்கப்படும் கட்டணங்களை இவர்களால் செலுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, இவ்வின மக்களையும் கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையில் இவ்வரசு, கீழ்க்காணும் பல்வேறு கல்வி உதவித்தொகைகளுடன் கட்டணச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

## *(அ) மைய அரசு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை*

பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின் மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**பராமரிப்புப் படிகள்**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்கில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன:-

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | (i) மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், வரைகலை (Planning) கட்டடக்கலை, வடிவமைப்பு, நவீன ஆடை தொழிற்நுட்பம் (Fashion Technology), வேளாண்மை, கால்நடை மற்றும் அதைச்சார்ந்த அறிவியல் படிப்புகள், வணிகம், நிதி / நிர்வாகம், கணினி அறிவியல் / பயன்பாடு (Applications) படிப்புகளில் பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு | 1200 | 550 |
| | (ii) மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் | 1200 | 550 |

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| | (iii) CA/ICWA/CS/ICFA etc.,<br>(iv) M.Phil, Ph.D., & Post Doctorate programmes | ----<br>1200 | 550<br>550 |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட தொழில் கல்வியில் பட்டப்படிப்பு, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்பில் மருந்தாக்கியல், செவிலியர், LLB, விருந்தோம்பல், சுற்றுலா, போக்குவரத்து மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற படிப்புகள் மற்றும் தொகுதி I-ல் சாராத முதுநிலைப் பட்டப் படிப்புகள் (எ.கா. M.A.,/ M.Sc., / M.Com., / M.Ed., / M.Pharm., etc., | 820 | 530 |

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர பட்டப்படிப்புகள் | 570 | 300 |
| IV | 10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட பட்டப்படிப்பு அல்லாத படிப்புகள் (எ.கா. XI, XII, ITI, தொழில் பயிற்சிக் கல்வி etc.,) | 380 | 230 |

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பராமரிப்புப் படியுடன் கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய மற்றும் மாணாக்கருக்கு திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு, அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு நிர்ணயிக்கும் திருப்பிச் செலுத்தப்படாத மற்றும் கட்டயாக் கட்டணத்திற்கு மிகாமல், நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் சேரும் மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணம் கல்வி நிலையங்களின் கணக்குகளில் மாணாக்கர் சார்பாக அரசால் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2018-2019ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்கு ரூ.1701 கோடியும், பழங்குடியின மாணாக்கருக்கு ரூ.46.44 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை*

மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெற இயலாத ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு அவர் தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

## பராமரிப்புப் படிகள்

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்கில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம் | 350 | 175 |
| II | கலை, அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு | 225 | 140 |
| III | கலை, அறிவியல் இளங்கலை பட்டப்படிப்பு | 175 | 100 |
| IV | ஐ.டி.ஐ. / +1, +2 | 175 | 100 |

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பராமரிப்புப் படியுடன், கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய மற்றும் மாணாக்கருக்கு திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள், மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கல்வி கட்டண நிர்ணயக் குழு நிர்ணயித்த கல்லூரிக் கட்டணம் கல்வி நிறுவனங்களின் கணக்கில் அரசால் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.82.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) மைய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டங்கள்

***(i) தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்***

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிவோர் மற்றும் தோல் பதனிடுதல், தோல் உரித்தல், கழிவு பொருட்களிலிருந்து தரமான பொருட்களை பிரித்து சேகரிப்பவர், கழிவு நீரை அகற்றுவோர் ஆகியோரின் குழந்தைகள் 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் சேர்ந்து படிக்கும் நிலையில், இந்த கல்வி உதவித்தொகையினை பின்வரும் வீதத்தில் பெறத்தகுதி உடையவர்கள் ஆவர்:

| | வெளி மாணாக்கர் (Day Scholar) | விடுதியில் தங்கி படிக்கும் மாணாக்கர் |
|---|---|---|
| பராமரிப்புப் படி | ரூ.225/– ஒரு மாதத்திற்கு | ரூ.700 ஒரு மாதத்திற்கு |
| தனி மானியம் | ரூ.750/– வருடத்திற்கு | ரூ.1000/– வருடத்திற்கு |

பராமரிப்புப் படியும் தனிமானியமும் பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

இந்த திட்டத்திற்கு 2018-2019ஆம் நிதியாண்டில், ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(ii) 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியின மாணாக்கர் கல்வி உதவித்தொகைத் திட்டம்*

அரசு, அரசால் அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் முழு நேர கல்வி பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம்

ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமலும், பழங்குடியின மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.**2** இலட்சத்திற்கு மிகாமலும் இருப்பின், கீழ்க்கண்டவாறு உதவித்தொகை அவர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:

| | **வெளி மாணாக்கர் (Day Scholar)** | **விடுதி மாணாக்கர்** |
|---|---|---|
| | **பராமரிப்புப் படி** | |
| ஆதி திராவிடர் | ரூ.225/– ஒரு மாதத்திற்கு | ரூ.525/– ஒரு மாதத்திற்கு |
| பழங்குடியினர் | ரூ.**150/–** ஒரு மாதத்திற்கு | ரூ.**325/–** ஒரு மாதத்திற்கு |
| | **தனி மானியம்** | |
| ஆதி திராவிடர் / பழங்குடியினர் | ரூ.750/– வருடத்திற்கு | ரூ.1000/– வருடத்திற்கு |

மேற்கண்ட திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர்களுக்கு ரூ.114.03 கோடியும், பழங்குடியினர்களுக்கு ரூ.5.39 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(ஈ) மாநில அரசின் உயர்கல்வி சிறப்பு படிப்புதவித்தொகை*

இத்திட்டத்தின்கீழ் அரசு / அரசு உதவி பெறும் கட்டண விடுதிகளில் தங்கி அரசு / அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் இளநிலை, தொழில் நுட்பம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு வருடந்தோறும் உதவித்தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| இளங்கலை, தொழில்நுட்பம் | ரூ.7500/– |
| முதுகலை, தொழிற்படிப்பு | ரூ.8000/– |

இந்நிதியுதவி மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.26.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(உ) வெளிநாட்டில் முதுகலைப்பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட ஆராய்ச்சி படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்*

வெளிநாடுகளில் பொறியியல், தொழில்நுட்பவியல், மருத்துவம், அறிவியல் பாடப்பிரிவுகளில் முதுகலைப்பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சி படிப்பை படிக்க விரும்பும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(ஊ) முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பிற்கு நிதியுதவி*

தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் அறிவியல் (Political Science) போன்ற படிப்புகளில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் மாணாக்கருக்கு ஆண்டு தோறும் ஊக்கத்தொகையாக ரூ.50,000/- வீதம் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகளுக்கு

(வருடத்திற்கு 1200 நபர்கள்) வழங்கப்படுகிறது. ஒப்பளிக்கப்படும் ஊக்கத்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. பயனாளி ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். பயனாளிகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. கல்வி கட்டணச் சலுகைகள்

### *(அ) கற்பிப்புக் கட்டணச் சலுகை*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயில்கின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் வருமான வரம்பின்றி கல்வி நிலையங்களுக்கு கற்பிப்புப் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்பட்டுள்ளனர். இதனால் கல்வி நிலையங்களுக்கு ஏற்படும் இழப்பு அரசால் ஈடுகட்டப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.7.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(ஆ) இளங்கலை மாணாக்கருக்கு சலுகைகள்*

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு, வருமான உச்ச வரம்பின்றி சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2018-2019-ஆம் நிதியாண்டில், ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(இ) முதுகலை மாணவியருக்கு சலுகைகள்*

அரசு / அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணவியருக்கு வருமான உச்ச வரம்பின்றி, சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***(ஈ) ஆங்கில வழி பயிலும் மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் கற்பிப்பு கட்டணச் சலுகை***

ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கருக்கும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு இந்த கட்டணம் கல்வி நிலையங்களுக்கு நேரடியாக விடுவிக்கப்படுகின்றது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியில் கல்வி பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு, கல்வி நிலையங்களுக்கு இக்கட்டணம் நேரடியாக விடுவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.1.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## *(உ) இதர கட்டணச் சலுகைகள்*

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ் வழியில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் **தேர்வுக் கட்டணம்** செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணம் பள்ளிக் கல்வித்துறைக்கு நேரடியாக இத்துறையால் ஈடு செய்யப்படுகின்றது.

அதேபோன்று, ஆங்கில வழியில் கல்வி பயிலும் மாணாக்கருக்கும் இத்தேர்வுக் கட்டணம் அரசு தேர்வுகள் இயக்குநரகத்திற்கு அரசால் நேரடியாக ஈடுசெய்யப்படுகின்றது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற் கல்வி படிப்புகளுக்கு **விண்ணப்பக் கட்டணம்** மற்றும் **பதிவுக் கட்டணம்** செலுத்துவதிலிருந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு

விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக விடுவிக்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.2.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. பெண்கல்வி ஊக்கத் தொகைத் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவியரின் இடைநிற்றலை (Drop out) தடுத்து, அவர்களின் கல்வித் தரத்தை மென்மேலும் உயர்த்துவதற்கும், அவர்கள் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும், பெண் கல்வி ஊக்கத் தொகைத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படுகிறது. அரசால் வழங்கப்படும் ஊக்கத் தொகை விவரம் பின்வருமாறு :

| வகுப்பு | தொகை (ஆண்டொன்றுக்கு) | 2018–19 நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 3 முதல் 5 வரை | ரூ.500/– | ரூ.17.00 கோடி |
| 6 | ரூ.1000/– | ரூ.38.11 கோடி |
| 7 மற்றும் 8 | ரூ.1500/– | |

## 4. பரிசுத் தொகைத் திட்டம்

இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு, தொழில்நுட்பப் படிப்பு ஆகிய தேர்வுகளில் **60%** மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெறும் சிறந்த ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:

| **படிப்பு** | **தொகை (ஒருவருக்கு)** | **2018–19 நிதி ஒதுக்கீடு** |
|---|---|---|
| இளங்கலை | ரூ.**3000/–** | ரூ.**42.00** இலட்சம் |
| முதுகலை | ரூ.**5000/–** | |
| தொழில்நுட்பப் படிப்பு | ரூ.**6000/–** | |

## 5. விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

இத்துறையைச் சார்ந்த பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு

குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம் நிதியாண்டில் ரூ.1.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. சீருடைகள் வழங்குதல்

ஒன்றாம் வகுப்பு முதல் **8** ஆம் வகுப்பு வரை இத்துறைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கருக்கு, சமூக நலத்துறையால் சீருடைகள் தைத்து, பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக வழங்கப்படுகின்றன. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை இத்துறை பள்ளிகளில் படிக்கின்ற மாணாக்கருக்கு, இத்துறையின் மூலம் தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்களால் அளவு எடுக்கப்பட்டு, சீருடைகள் தைக்கப்பட்டு, பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக வழங்கப்படுகின்றன. இத்துறை விடுதிகளில் தங்கி பல்வேறு பள்ளிகளில் படிக்கின்ற மாணாக்கருக்கு, தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் அளவு எடுக்கப்பட்டு, சீருடைகள் தைக்கப்பட்டு, விடுதி காப்பாளர் அல்லது காப்பாளினி வழியாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2018–19ஆம் நிதியாண்டில் ரூ.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

பள்ளி விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணாக்கரின் பயன்பாட்டிற்காக, அனைத்து வகையான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்கி வழங்கப்படுகின்றன. கல்லூரி விடுதிகளுக்கு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து வகையான புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம் நிதியாண்டில் ரூ.11.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. மிதிவண்டிகள் வழங்குதல்

அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 11ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கும், 11 ஆம் வகுப்பில் வழங்காமல் விடுபட்டு 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2018–2019ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.71.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. சிறந்த தனியார் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்த்தல்

அரசு, அரசு நிதியுதவி பெறும், மாநகராட்சி, நகராட்சி, ஆதி திராவிடர் நல, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் படித்து, மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பில் சிறந்து விளங்கும் ஆதி திராவிடர் / பழங்குடியின மாணாக்கர் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அரசு ஆண்டு தோறும் ஒரு மாணாக்கருக்கு ரூ.28000/- வீதம் செலவிடுகிறது. 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் இணையதளத்தின் வாயிலாகவும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்தும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த சிறந்த 10 மாணாக்கரின் பெயர்ப் பட்டியலைப் பெற்று, அதே மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்த்து, அவர்களுக்கான கல்வி உதவித் தொகை அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது.

ஒவ்வோர் ஆண்டும், தமிழ்நாடு முழுவதும் 320 மாணாக்கர் இத்திட்டத்தின் வாயிலாக பயன் பெறுகிறார்கள். பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம் நிதியாண்டில் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. நற்பெயர் பெற்றப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

ஆதி திராவிடர் நல / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் / அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் / மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் 5ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர் / பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ / மாணவியருக்கு அனைவருக்கும் கல்வித் திட்ட அலுவலரின் உதவியுடன் தனித்தேர்வு ஒன்றினை நடத்தி அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர் அல்லது மாணவி ஒருவரை வட்டாரத்திற்கு (Block) ஒருவர் வீதம் 385 வட்டாரங்களில் இருந்து 385 மாணாக்கரை தேர்வு செய்து அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரை பெற்று சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் சேர்த்து அவர்கள்

தொடர்ந்து 12ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினம் முழுவதும் அரசால் ஏற்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம் நிதியாண்டில் ரூ.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. விடுதிகள்

கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய மாணாக்கர்கள், அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகாமையில் தங்கி, சிறப்புடன் கல்வி பெற இத்துறையால் விடுதிகள் நிர்வகிக்கப்படுகின்றன. இவ்விடுதிகளில் மாணாக்கரின் உபயோகத்திற்காக பல்வேறு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் நல விடுதிகள், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணமும், சில்லறைச் செலவினமும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:

| | **பள்ளி மாணாக்கருக்கு** | **கல்லூரி மாணாக்கருக்கு** |
|---|---|---|
| உணவுக் கட்டணம் | ரூ.900/– (ஒரு மாதத்திற்கு) | ரூ.1000/– (ஒரு மாதத்திற்கு) |
| சில்லறைச் செலவினம் (சோப்பு, எண்ணெய் வாங்குவதற்கு மற்றும் முடி வெட்டுதல்) | ரூ.50/– (ஒரு மாதத்திற்கு) | ரூ.75/– (ஒரு மாதத்திற்கு) |

# பள்ளி விடுதிகள் வாராந்திர உணவுப் பட்டியல்

| கிழமை | காலை சிற்றுண்டி | நண்பகல் உணவு | மாலை | இரவு உணவு |
|---|---|---|---|---|
| திங்கள் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, இஞ்சி ரசம், பொரியல், முட்டை(1) |
| செவ்வாய் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1) |
| புதன் | எலுமிச்சை சாதம், துவையல் | சாதம், மட்டன்/ சிக்கன் குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, ரசம் |
| வியாழன் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1) |
| வெள்ளி | பொங்கல், சட்னி | சாதம், மோர்க்குழம்பு, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம் |

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | இட்லி, சட்னி | சாதம், சாம்பார், கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், கூட்டு |
| ஞாயிறு | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், தக்காளி சூப், பொரியல், ரசம் |

**ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி வாரத்திற்கு ஒரு முறை (புதன்கிழமை)**

| | | |
|---|---|---|
| முதல் வாரம் | ஆட்டிறைச்சி | 100 கிராம் |
| இரண்டாவது வாரம் | கோழி இறைச்சி | 100 கிராம் |
| மூன்றாவது வாரம் | ஆட்டிறைச்சி | 100 கிராம் |
| நான்காவது வாரம் | கோழி இறைச்சி | 100 கிராம் |

# கல்லூரி விடுதி வாராந்திர உணவுப் பட்டியல்

| கிழமை | காலை சிற்றுண்டி | நண்பகல் உணவு | மாலை | இரவு உணவு |
|---|---|---|---|---|
| திங்கள் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை(1) |
| செவ்வாய் | இட்லி, சாம்பார் | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், முட்டை(1), பொரியல், ரசம் |
| புதன் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், மட்டன்/ சிக்கன் குருமா, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், தக்காளி சூப், பொரியல், ரசம் |
| வியாழன் | எலுமிச்சை சாதம், துவையல் | சாதம், குழம்பு, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம் முட்டை(1) |

| | | | | |
|---|---|---|---|---|
| வெள்ளி | ரவை கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், ரசம், பொரியல், மோர் |
| சனி | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், ரசம், மோர் |
| ஞாயிறு | பொங்கல், சட்னி | சாதம், காய்கறி, குருமா, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | இட்லி, சாம்பார். |

**ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி வாரத்திற்கு ஒரு முறை**

**(புதன் கிழமை)**

| | | |
|---|---|---|
| முதல் வாரம் | ஆட்டிறைச்சி | 120 கிராம் |
| இரண்டாவது வாரம் | கோழி இறைச்சி | 125 கிராம் |
| மூன்றாவது வாரம் | ஆட்டிறைச்சி | 120 கிராம் |
| நான்காவது வாரம் | கோழி இறைச்சி | 125 கிராம் |

இத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:–

## ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம்

| வ. எண். | விடுதிகளின் விவரம் | மொத்த விடுதிகள் | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பள்ளி விடுதிகள் | 1143 | 82766 |
| 2 | கல்லூரி விடுதிகள் | 143 | 13050 |
| 3 | ஐ.டி.ஐ. விடுதிகள் | 17 | 1372 |
| 4 | பாலிடெக்னிக் விடுதிகள் | 5 | 288 |
| 5 | முதுகலை பட்டதாரி கல்லூரி விடுதிகள் | 15 | 1008 |
| 6 | சட்டக்கல்லூரி விடுதிகள் | 1 | 55 |
| | **மொத்தம்** | **1324** | **98539** |

## விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:–

i. கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. 582 மாணவியர் விடுதிகளுக்கு சுகாதாரக் குட்டை தகளிகள் (Napkin burners) வழங்கப்பட்டுள்ளன.

iii. அனைத்து விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

iv. 76 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

v. சுகாதார முறையில் சமைத்திட 380 நீராவி கொதிகலன்கள் ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கும், 160 நீராவி கொதிகலன்கள் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

vi. அனைத்து விடுதிகளுக்கும் முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

vii. அனைத்து விடுதிகளிலும் நூலக வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

viii. மாணாக்கருக்கு பாய் மற்றும் போர்வைகள் வழங்கப்படுகின்றன.

## 12. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே உணவுக் கட்டணம், பல்வகை செலவினம் மற்றும் இதர சலுகைகளும் 30 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகளில் தங்கிப்பயிலும் 4943 ஆதி திராவிடர் மாணாக்கருக்கு இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

## ஆதி திராவிடர் நலனுக்காக தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசின் நிதியுதவி

### *I. முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை*

### *(i) பள்ளிகள்:*

தூத்துக்குடி மாவட்டத்தில் இயங்கி வரும் முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை பள்ளியில், 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மொத்தம் 4040 பேர் பயில்கின்றனர். இந்த அறக்கட்டளைக்கு 2006ஆம் ஆண்டு முதல் சம்பளம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

127 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு ஊதியம் அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

***(ii) விடுதிகள்:***

இதே அறக்கட்டளை நடத்தும் விடுதிகளில் 3500 மாணாக்கர் தங்கி உள்ளனர். 2014-2015 ஆம் நிதியாண்டு முதல் காப்பாளர், சமையலர், காவலர் மற்றும் துப்புரவாளர் என 32 பணியாளர்களுக்கு ஊதியம் அரசால் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## II. இதர 28 தொண்டு நிறுவன விடுதிகள்:

| வ. எண். | தொண்டு நிறுவனங்கள் | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகர மாணவியர் விடுதி, சென்னை–35. | 34 |
| 2 | சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை. | 27 |
| 3 | ஆதி திராவிடர் சமூக சேவா சங்க மாணவருக்கான இல்லம், சென்னை–21. | 100 |
| 4 | இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம், சென்னை–4. | 32 |

| வ. எண். | தொண்டு நிறுவனங்கள் | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 | குருகுலம் உணவகத்துடன் அமைந்த இல்லம், மதுராந்தகம். | 9 |
| 6 | இராமகிருஷ்ண மிஷன் விடுதி, மல்லியக்கரணை. | 12 |
| 7 | புனித மேரி பெண்கள் உயர்நிலைப்பள்ளி உணவகத்துடன் அமைந்த இல்லம், செங்கல்பட்டு. | 63 |
| 8 | காந்தி மிஷன் குழந்தைகள் இல்லம், வாலாஜா. | 40 |
| 9 | ஆர்.எஸ்.எஸ். இல்லம், இராணிப்பேட்டை. | 23 |
| 10 | பர்வதராஜ குருகுலம் ஏழை மாணவர்களின் விடுதி, காட்டுமன்னார்கோவில். | 22 |
| 11 | சேவா சங்கம் மாணவர் விடுதி, திருக்கோவிலூர். | 15 |
| 12 | சரயா சத்திரம் விடுதி, தஞ்சாவூர். | 47 |
| 13 | சத்திரம் உணவகத்துடன் அமைந்த விடுதி, ஒரத்தநாடு. | 16 |
| 14 | ராஜன் விடுதி, ஒரத்தூர். | 48 |
| 15 | ஆர்.எஸ்.எஸ். இல்லம், பட்டுக்கோட்டை. | 138 |
| 16 | கஸ்தூரிபாய் காந்தி கன்யா குருகுலம், வேதாரண்யம். | 14 |

| வ. எண். | தொண்டு நிறுவனங்கள் | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| 17 | சேவாலயம் மாணவர்கள் விடுதி, மதுரை. | 136 |
| 18 | கஸ்தூரிபாய் பெண்கள் விடுதி, மேலூர். | 129 |
| 19 | காந்திஜி மாணவர் விடுதி, மேலூர். | 39 |
| 20 | சாந்தி மாணவர் விடுதி, நிலக்கோட்டை. | 34 |
| 21 | பாரதி மாணவர் விடுதி, திண்டுக்கல். | 107 |
| 22 | கஸ்தூரிபாய் மாணவியர் விடுதி, திண்டுக்கல். | 67 |
| 23 | விவேகானந்தா மாணவர் விடுதி, கம்பம். | 24 |
| 24 | புனித மைக்கேல் உணவகம் அமைந்த இல்லம், கீழ்கைலாசபுரம். | 62 |
| 25 | ஸ்ரீ சற்குரு மாணவர் விடுதி, குன்னூர். | 20 |
| 26 | சிஎஸ்ஐ செல் நினைவு மாணவியர் விடுதி, உதகமண்டலம். | 40 |
| 27 | டி.எஸ். இராமன் மற்றும் சரோஜினி தேவி விடுதி, கோபிசெட்டிப்பாளையம் | 107 |
| 28 | பிஎஸ்ஜி கங்காநாயுடு நினைவு விடுதி, பீளமேடு. | 38 |
| | **மொத்தம்** | 1443 |

## 13. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குதல்

இத்திட்டத்தின் கீழ் வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான நிலங்கள் தனியார் பேச்சுவார்த்தை அல்லது நில எடுப்பு சட்டத்தின்படி கையகம் செய்து தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

| | **வழங்கப்படும் அளவு** | **பயனாளியின் வருட வருமானம்** |
|---|---|---|
| கிராமப்புறங்களில் | 3 செண்ட் இடம் | ரூ.72,000/– |
| நகராட்சியில் | 1 ½ செண்ட் இடம் | |
| மாநகராட்சியில் | 1 செண்ட் இடம் | |

இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருவதுடன், நிலத்தை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

உள்ளாட்சி அமைப்புகளும் தங்களுடைய சொந்த நிதியிலிருந்து ஆதி திராவிடர் மயானங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றன. குடிநீர் வசதிக்கான செலவினத்தில் 15 விழுக்காடும் இணைப்புச்சாலை வசதிக்கான செலவினத்தில் 10 விழுக்காடும் இத்துறையால் ஏற்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. ஈமச்சடங்கு உதவித்தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பத்தில் ஏதேனும் இறப்பு ஏற்பட்டால்

ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.2,500/-வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP)

ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-1981 நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மக்கள் சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடையும் வகையில், தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் மக்கள் தொகைக்கு (20.01%) இணையாக மாநில மொத்த திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை தீட்டுவதற்கும், செயல்படுத்துவதற்கும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) விளங்குகிறது. இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer)

அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல இயக்குநர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். 44 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 20 செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும் நலனுக்காக இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2018-2019 ஆம் ஆண்டு மாநில திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம் – Welfare Expenditure of State) ரூ.55498.16 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் (ஆதி திராவிடர் நலத்திட்ட செலவினம் – Expenditure on Scheduled Castes welfare) ரூ.11669.30 கோடி (21.03 விழுக்காடு) மாநில அரசால்

ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள் தொகை விழுக்காட்டை விட அதிகமானதாகும்.

## 17. ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP)

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், குடும்ப வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களில் உள்ள தடைகளைக் களையவும், பொருளாதாரம் மற்றும் திறன் மேம்பாடு அடையச் செய்யவும், உற்பத்தி திறன் மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கிலும், மாநில அரசின் ஆதி திராவிடர் துணைத்திட்டத்திற்கு கூடுதலாக வலுசேர்க்கும் வகையில் மைய அரசு தனது திட்டங்களிலிருந்து கூடுதலாக 100 விழுக்காடு மானியத்தில் நிதியுதவி வழங்குகிறது. இந்த நிதியில் 80 விழுக்காடு, ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவும், 10 விழுக்காடு வேலையில்லா ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோ மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 10

விழுக்காடு நிதி, ஆதி திராவிடர்கள் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் வசிக்கும் இடங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென, 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.135 கோடி நிதி மைய அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 18. சாதிச் சான்றிதழ்கள்

(i) ஆதி திராவிடர்களுக்கான சாதிச்சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியரால் ஆதி திராவிடர்களுக்கு சாதிச்சான்று வழங்க மறுக்கும் பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதுடன், அதன்பிறகு குறைகள் நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சியரை அணுகலாம்.

(ii) ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:-

**மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு**

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | தலைவர் | ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226–இன்படி உயர் நீதி மன்றத்திலும், கூறு 136–இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |
| 2 | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | உறுப்பினர் செயலர் | |
| 3 | மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் | |

## 19. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், SC மற்றும் ST (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

### (அ) தீண்டாமை ஒழிப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டு SC மற்றும் ST

(வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 போன்றவை மைய அரசால் இயற்றப்பட்டு, மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திருத்தச் சட்டம், 2015 மற்றும் திருத்த விதிகள் 2016 ஆகியவை முறையே 01.01.2016 மற்றும் 14.04.2016 ஆகிய தேதிகளில் அமலுக்கு வந்துள்ளன.

மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துவற்கென கூடுதல் காவல்துறைத் தலைவர் தலைமையின் கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

இந்த இரு சட்டங்களின் கீழ் (i) வழக்குகள் பதிவு செய்தல், புலன் விசாரணை, வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதும், (ii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவதுமே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.

**சிறப்பு நீதிமன்றங்கள்**

SC மற்றும் ST (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் மற்றும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 6 சிறப்பு நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண். 334, உள்(நீதிமன்றங்கள்–II) துறை, நாள்.06.04.2017–இல் **16** சிறப்பு நீதிமன்றங்களை திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், பெரம்பலூர், தேனி, திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர், திருவாரூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், கடலூர் மற்றும் நாமக்கல் ஆகிய 16 மாவட்டங்களில் 2016–2017 முதல் 2019–2020 வரையில் 4 கட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்குவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. முதற்கட்டமாக திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர்

மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 மாவட்டங்களில் 4 சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்க ரூ.3.22 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவானது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989–இன் கீழ் பதியப்படும் வழக்குகளை மேற்பார்வையிடுகிறது. ஆதி திராவிடர் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் அமல்படுத்தப்படுவதை மாநில அளவில் ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் கண்காணித்து வருகின்றனர்.

1995 ஆம் ஆண்டு SC மற்றும் ST மக்களுக்கான வன்கொடுமைத் தடுப்பு விதிகளில் விதி எண்.17(1)இன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான

விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பிரச்சனைகளை அறிந்த மற்றும் நல்ல நோக்கம் கொண்டவர்களை உறுப்பினராக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளித்தது குறித்தும், இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யும். மேலும், இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவில் ஒரு விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.11.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமையின் தீமை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. தீண்டாமையினைப் பின்பற்றினால் சமுதாயத்தில் ஏற்படும் தீங்கு தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறுந்திரைப் படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன.

மனித நேய வார விழா ஒவ்வோர் ஆண்டும், அனைத்து மாவட்டங்களிலும் ஜனவரி 24 முதல் 30 ஆம் தேதி வரை, பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தீண்டாமைக்கெதிராக நடத்தப்படுகிறது. மனிதநேய வார விழா நடத்துவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.50,000/-, மாநில அளவில் ரூ.1,00,000/- வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டு கலைஞர்கள் மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

மேலும், சமபந்தி விருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2

ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் ஏற்பாடு செய்யப்படுகிறது. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்ய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

தீண்டாமை ஒழிப்பு குறித்து மக்களுக்கு எடுத்துரைக்க விளம்பரப் பிரிவு ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகின்றது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.12.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்**

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னையைத் தவிர) தீண்டாமையை விட்டொழித்து பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு ரூ.10 இலட்சம் நிதி அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2018-2019 ஆம் நிதியாண்டில், ரூ.3.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் ஆதி திராவிடர் இன கலைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடவும், ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வைப்புக் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதிலிருந்து பெறப்படும் வட்டித்தொகை தெரிவு செய்யப்படும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகையாக வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 10 ஆதி திராவிடர் இன எழுத்தாளர்கள் மற்றும் இதர சாதியைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் என சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்ட 11 எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.40,000 பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

# II. பழங்குடியினர் நலன்

**முன்னுரை**

ஒருங்கிணைந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்திலிருந்து பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நல இயக்ககம் 01.04.2000 முதல் பிரிக்கப்பட்டு தனியாக செயல்பட்டு வருகிறது. மேலும், அரசாணை (நிலை) எண். 56 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-1)துறை, நாள்.28.08.2017–இன்படி பழங்குடியினர் நலப் பொருண்மைகள் குறித்த நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களுடன் முழு அதிகாரத்தோடு கூடிய தனி பொறுப்புடன் **01.04.2018** முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், இத்துறையானது பல புதுமையான திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வித் தரத்தினை உயர்த்தி வருகிறது. தமிழக அரசு பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கு, பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தர்மபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு,

திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய 18 மாவட்டங்களில் மிகுந்த முனைப்புடன் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

ஏழ்மை சூழ்நிலையில் வாழும் நிலை, மலைப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் குறைவு, ஊட்டச்சத்து குறைபாடுகள், பள்ளி படிப்பை பாதியிலேயே நிறுத்தி விடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, குறைந்த கல்வி அறிவு, வன வளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல் போன்ற இன்னல்களை பழங்குடி மக்கள் சந்தித்து வருகின்றனர்.

கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றில் மேம்பாடு அடையச் செய்வதும், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்தல், இணைப்புச்சாலைகள் அமைத்தல், வீடுகள் கட்டித்தருதல் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, அனைத்திலும் வளர்ச்சி அடைய செய்வதன் மூலம் பழங்குடியினருக்கும் பழங்குடியினர் அல்லாதோருக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதும், பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்துவதும் அரசின் முக்கிய குறிக்கோளாகும்.

## தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினர் இனங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணைகள் (திருத்தம்) சட்டம், **1976–**இன்படி 36 வகை பழங்குடியினர் தமிழகத்தில் உள்ளனர். அவர்கள் பின்வருமாறு: (1) ஆதியன் (2) அரநாடன் (3) இரவலன் (4) இருளர் (5) காடர் (6) கம்மாரா** (7) காணிக்காரன், கணிக்கர்* (8) கணியன், கண்யன் (9) காட்டுநாயகன் (10) கொச்சு வேலன் (11) கொண்ட காப்புஸ் (12) கொண்டாரெட்டிஸ் (13) கொரகா (14) கோட்டா** (15) குடியா, மேலக்குடி (16) குறிச்சான் (17) குரும்பாஸ் (நீலகிரி மாவட்டத்தில்) (18) குருமன்ஸ் (19) மஹா மலசர் (20) மலை அரையன் (21) மலை பண்டாரம் (22) மலை வேடன் (23) மலக்குறவன் (24) மலசர் (25) மலையாளி (தருமபுரி, வட ஆற்காடு, புதுக்கோட்டை, சேலம், தென்னாற்காடு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்) (26) மலேயகண்டி (27) மன்னான் (28) முதுகர், முதுவன் (29) முத்துவன் (30) பள்ளேயன் (31) பள்ளியன் (32) பள்ளியர் (33) பணியன் (34) சோழகா (35) தோடா** (36) ஊராளி

***(*கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்)***
*(**கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை நீங்கலாக)*

மாநிலத்திலுள்ள 36 வகையான பழங்குடியினரில் 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

## 1. கல்வி

### (i) பள்ளிகள்:

பழங்குடியின மக்களை கல்வி அறிவில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிடப் பள்ளிகள் அரசால் தோற்றுவிக்கப்பட்டு இத்துறையால் நிர்வகிக்கப்படுகின்றன.

**பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்.**

| வ. எண். | விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி | 308 | 26,388 |
| 2 | ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி | 7 | 1,553 |
| | **மொத்தம்** | 315 | 27,941 |

### (ii) விடுதிகள்

பழங்குடியின மாணாக்கர் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக, இத்துறையால் விடுதிகள் கட்டப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. மாணாக்கர் நன்கு கல்வி பயில விடுதிகளில் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

**பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்.**

| வ. எண். | விடுதிகளின் வகைப்பாடு | விடுதிகளின் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பழங்குடியினர் நல விடுதிகள் | 43 | 2,325 |
| 2 | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 315 | 27,941 |
| | **மொத்தம்** | 358 | 30,266 |

## 2. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 6 விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 887 பழங்குடியின

மாணாக்கர் பயன்பெறும் வகையில் உணவுக் கட்டணம் இத்துறையால் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படுவது போல தொண்டு நிறுவன விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கருக்கும் பல்வகை செலவினம் மற்றும் இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

## பழங்குடியினர் நலனுக்காக தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசின் நிதியுதவி

### *(i) முருகு தொண்டு நிறுவனம்*

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலையில், பழங்குடியின மாணாக்கர் நலனுக்காக முருகு என்ற தொண்டு நிறுவனத்தால் நடுநிலைப்பள்ளியும் மற்றும் விடுதியும் நடத்தப்படுகிறது. 2017-18–ஆம் ஆண்டில், இவ்விடுதியில் தங்கிப் பயிலும் 50 மாணாக்கருக்கு உணவுக் கட்டணம் மற்றும் இதர சில்லரை செலவினங்களுக்காக ரூ.2,55,930/- நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### *(ii) எஸ்.எப்.ஆர்.டி (S.F.R.D) தொண்டு நிறுவனம்*

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் பழங்குடியின மாணாக்கருக்கு கிராம வளர்ச்சி நிறுவனம் (Society for Rural Development) எனும் தொண்டு நிறுவனம் பள்ளி மற்றும் விடுதிகளை நிறுவி நடத்தி வருகிறது. இப்பள்ளியில் 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை மொத்தம் 2560 மாணாக்கர் பயின்று வருகின்றனர். 2005-ஆம் ஆண்டு முதல் இப்பள்ளிக்கு சம்பள மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2017-18-ஆம் ஆண்டில், 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு ரூ.2.31 கோடி சம்பளம் அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிறுவன விடுதியில் தங்கி பயிலும் 550 மாணாக்கருக்கு உணவுக்கட்டணம், பல்வகை செலவினம் மற்றும் இதர சலுகைகளும் அரசு விடுதிகளுக்கு வழங்கப்படுவது போன்றே வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், 4 தொண்டு நிறுவனங்களின் விவரம் மற்றும் மாணாக்கர்களின் எண்ணிக்கை:

| வ. எண் | தொண்டு நிறுவனத்தின் பெயர் | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சற்குரு சர்வ சமரச சங்கம், டி.ஆர். ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, குன்னூர். | 32 |
| 2 | ஸ்ரீ சற்குரு சர்வ சமரச சங்கம், டி.ஆர். பெண்கள் உயர்நிலைப்பள்ளி, குன்னூர். | 50 |
| 3 | ராம்கோ குரூப் துவக்கப்பள்ளி, ராஜபாளையம் | 155 |
| 4 | ஏ.ஐ.எம் சேவா, ஆனைக்கட்டி, கோயம்புத்தூர் | 50 |

## 3. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகள் (ITDP)

மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் பழங்குடியினர் வாழும் 10 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளைக் கொண்ட கீழ்க்கண்ட 7 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

| | |
|---|---|
| 1. சேலம் | – ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன்மலை |
| 2. நாமக்கல் | – கொல்லிமலை |
| 3. விழுப்புரம் | – கல்ராயன்மலை |
| 4. திருவண்ணாமலை | – ஜவ்வாதுமலை |
| 5. திருச்சிராப்பள்ளி | – பச்சமலை |
| 6. தர்மபுரி | – சித்தேரி மலை |
| 7. வேலூர் | – ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை |

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப்பகுதிகளில், பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை செயல்படுத்திட மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் 7 திட்ட அலுவலகங்கள் திட்ட அலுவலரின் தலைமையின் கீழ் அரசாணை (நிலை) எண். 34 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந1) துறை, நாள் 25.04.2017-இன்படி ஏற்படுத்தி செயல்பட்டு வருகின்றன.

## 4. மைய அரசின் உதவித் தொகை

மைய அரசு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதி விடுவிக்கின்றது:

(i) பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறப்பு மத்திய உதவி (SCA to TSP)

(ii) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)-இன் கீழ் ஒதுக்கீடு (Article 275 (1) of Cons. of India)

(iii) அழிவின் விளிம்பிலுள்ள பழமை பழங்குடியினருக்குச் சிறப்பு ஒதுக்கீடு (PVTGs)

### (அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி

இத்திட்டத்தின் கீழ் 60 விழுக்காடு நிதி பழங்குடியினர் வாழும் பகுதிகளில் வருவாய் ஈட்டும் திட்டங்களுக்காகவும், 30 விழுக்காடு நிதி பழங்குடியினர் பகுதிகளில் உட்கட்டமைப்புப் பணிகளைச் செய்வதற்காகவும் செலவிடப்படுகிறது. எஞ்சிய 10 விழுக்காடு நிதி பழங்குடியின மக்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிதியிலிருந்து பழங்குடியினருக்கு இயந்திர கலப்பைகள், வீடு கட்டித் தருதல், தேனீ வளர்ப்பு, வன உரிமைச் சட்டம் செயல்படுத்துதல், பெட்டிக் கடைகள், பள்ளிக் கட்டடங்கள் சரிபார்த்தல், கழிவறை மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2018-19 ஆம் நிதியாண்டில் ரூ.651 இலட்சம் உத்தேச நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு** 275(1)

இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)-இன் கீழ், மைய அரசால் வழங்கப்படும் நிதியுதவியிலிருந்து பழங்குடியினர் பகுதிகளில் உட்கட்டமைப்புப் பணிகள், அதாவது நடை மேம்பாலம், இணைப்புச் சாலைகள், மின் இணைப்பு, தடுப்பணை, சிக்கில் செல் அனீமியா என்ற நோயை கண்டறிதல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வனங்களில் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006 ஆம் ஆண்டு அமலுக்கு வந்ததைச் செயல்படுத்துவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

ஏற்கனவே இயங்கிவரும் (1) விழுப்புரம் மாவட்டம் – வெள்ளிமலை, (2) சேலம் மாவட்டம் – அபிநவம், (3) திருவண்ணாமலை மாவட்டம் – அத்திப்பட்டு, (4) நீலகிரி மாவட்டம் – கோடப்பமந்து, (5) வேலூர் மாவட்டம் – அத்தனாவூர் மற்றும் (6) நாமக்கல் மாவட்டம் – செங்கரை ஆகிய 6 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிகளின் தொடர் செலவினத்திற்கும் பள்ளிகளைப் பராமரிப்பதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டம் – பட்டிப்புலம் கிராமத்தில் மேலும், ஒரு புதிய ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் நிதியாண்டிற்கு ரூ.1700 இலட்சம் உத்தேச நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

## (இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, மைய அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கி வருகிறது.

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களுக்கென்று பாரம்பரிய வீடுகள் கட்டுதல், கறவை மாடுகள் வழங்குதல், குடிநீர் வசதி, பாசன தடுப்பணை மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்தல், ஆரம்ப சுகாதார மையம், சாலை வசதி மற்றும் தெருவிளக்குகள் போன்ற வசதிகள் மற்றும் தேனீ வளர்ப்பு, மீன்பிடி வலை, இருசக்கர வாகனம், செங்கல் சூளை அமைத்தல் போன்ற பொருளாதார மேம்பாட்டு வசதிகள் மற்றும் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்கள் குறித்த அடிப்படை மக்கள் கணக்கெடுப்பு (PVTGs Baseline Survey) மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஜுன் 2018 இல் புதிதாக துவங்கப்பட்டுள்ள ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக்கான கட்டட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் மற்றும் மாணாக்கர் மலை உச்சியிலிருந்து மலை அடிவாரத்திற்கு சென்றுவர இரண்டு சிற்றுந்துகள் (Eicher Cab) வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 2018–19 ஆம் நிதியாண்டில் ரூ.4000 இலட்சம் உத்தேச நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**(ஈ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தைச் செயல்படுத்துதல்**

மைய அரசு, 2006 ஆம் ஆண்டு பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம், 29.12.2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, 13.12.2005ஆம் நாளுக்கு முன்பே வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினரும் மற்றும் 13.12.2005-ஆம் தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக அதாவது 75 ஆண்டுகளாக வனங்களில் குடியிருக்கும் பிற மரபு வழியினரும் இச்சட்டத்தின் கீழ் வன உரிமைகள் பெறுவதற்கு தகுதி உடையவர்களாகிறார்கள்.

இச்சட்டத்தின் செயல்பாடு பின்வரும் குழுக்களால் கண்காணிக்கப்படுகிறது.

i) அரசு தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு

ii) மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு

iii) வருவாய் கோட்ட அலுவலரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போருக்கான வன உரிமைகளை பாதுகாக்கவும், அங்கீகரிக்கவும் 17 மாவட்டங்களில் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வன உரிமைகள் சட்டம் 2006–இன்படி தனி நபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் ஆகியவற்றை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 5170 தனி நபர் உரிமைகளும் 254 சமூக உரிமைகளும் இச்சட்டத்தின்படி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தனி நபர் உரிமைகள் மற்றும் சமுதாய உரிமைகள் வழங்கப்பட்ட விவரம்:**

| வ. எண் | மாவட்டம் | தனி நபர் உரிமைகள் | சமுதாய உரிமைகள் |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | **1071** | **0** |
| 2 | தருமபுரி | **268** | **49** |
| 3 | திண்டுக்கல் | **63** | **0** |
| 4 | ஈரோடு | **740** | **0** |
| 5 | கிருஷ்ணகிரி | **0** | **39** |
| 6 | கன்னியாகுமரி | **153** | **0** |
| 7 | நாமக்கல் | **241** | **0** |
| 8 | நீலகிரி | **1215** | **58** |
| 9 | சேலம் | **478** | **5** |
| 10 | திருநெல்வேலி | **0** | **0** |
| 11 | திருவண்ணாமலை | **55** | **0** |
| 12 | தேனி | **73** | **14** |
| 13 | விழுப்புரம் | **477** | **89** |
| 14 | விருதுநகர் | **19** | **0** |
| 15 | வேலூர் | **317** | **0** |
| | **மொத்தம்** | **5170** | **254** |

## 5. விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2018–2019 ஆம் ஆண்டு ரூ.50 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நில மேம்பாட்டுத்

திட்டம், பழங்குடியினர் நல மேம்பாட்டு பணிகள், கூரை வீடுகளைச் சீரமைப்பு செய்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி, பழங்குடியினர் மேம்பாட்டிற்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தாட்கோ மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் புதிதாக கட்டடங்கள் கட்டிடவும், பராமரிக்கவும் மற்றும் கழிவறை, சமையலறை, ஆழ்துளைக் கிணறு மற்றும் மின்மோட்டார் மற்றும் மின்சாதன பழுது சரிபார்ப்பு பணி, குடிநீர் வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளில் காணொலி கலந்துரையாடல் சார்ந்த வகுப்பறைகளை அமைத்தல், வீடுகள் கட்டித் தருதல், பழங்குடியினர் வாழ்வாதாரத்திற்கான திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள், உண்டி உறைவிடப் பள்ளிகளை நிலை உயர்த்துதல், பழங்குடியினரை கல்வி மற்றும் விளையாட்டில் ஊக்கப்படுத்துதல், விடுதிகள் கட்டுதல், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களான இயந்திரக் கலப்பைகள் (Power Tillers) வழங்குதல், உயிரி மூங்கில்

தொழிற்சாலை அமைக்க பழங்குடியின சுயநிதி குழுக்களுக்கு நிதி வழங்குதல், கொத்தடிமைத் தொழிலிருந்து மீட்கப்பட்ட பழங்குடியினர் கரி (Charcoal) மற்றும் உயிரி எரிபொருள் (Biomass Briquettes) உற்பத்தி செய்து பொருள் ஈட்டவும், கைவினைத் தொழில் தொடங்கவும், மூலிகைச் செடிகள் மற்றும் மருத்துவ குணம் கொண்ட செடிகள் வளர்ப்பதற்கும், நாற்றங்கால் பண்ணை அமைப்பதற்கும் பழங்குடியினர் குழுக்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படுகிறது.

கல்வராயன் மலையில் உள்ள கருமந்துறையில் பழங்குடியினரின் விவசாயப் பொருட்களை சேமித்து வைத்து விலை கூடும் நேரத்தில் அவற்றை விற்பனை செய்யும் வகையில் சூரிய சக்தி குளிர் அறை (Solar Cold Room) ஒன்று ரூ.12.10 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

25 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகள் (Smart Clases) நிறுவ ரூ.1.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதர அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளிலும் அறிவுத்திறன் வகுப்பறைகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விழுப்புரம், தருமபுரி, நாமக்கல், சேலம், வேலூர், திருச்சி, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 128 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கழிவறை, குளியலறை, மின் மோட்டார் வசதியுடன் ஆழ்துளைக் கிணறு, குடிநீர் வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.5.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாரம்பரிய விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சம் வீதம் 7 மாவட்டங்களுக்கு ரூ.70 இலட்சம், இந்நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட திட்ட அலுவலர்கள் பணிகளை செயல்படுத்தி கண்காணித்து வருகின்றனர்.

## 6. பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம்

பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், பழங்குடியினர் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதாரம் மற்றும் கல்வி நிலை முதலியவற்றை ஆராய்ச்சி செய்வதற்காகவும், மைய அரசின்

நிதியுதவியுடன் **1983** ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் முத்தோரை பாலாடா என்ற இடத்தில் “பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்” ஒன்று அமைக்கப்பட்டது. இம்மையம், மானுடவியல் நிபுணத்துவம் வாய்ந்த இயக்குநர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இங்கு நூலகம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. பழங்குடியினரின் வாழ்க்கை முறை குறித்த புகைப்படங்கள் மற்றும் கலைப் பொருட்கள் ஆகியவை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இம்மையத்திற்காக 2018-19 ஆம் நிதியாண்டில், ரூ.112.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. தொழில்நெறி வழிகாட்டும் மையம்

பழங்குடியின இளைஞர்களின் வேலை வாய்ப்புக்கு வழிகாட்டும் வகையில், ஒரு தொழில்நெறி வழிகாட்டும் மையம் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது.

## 8. தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs)

பழங்குடியினருக்கென ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் சேலம் மாவட்டம் கருமந்துறை, நாமக்கல்

மாவட்டம் கொல்லிமலை, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

## 9. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

பழங்குடியினர்களுக்கான சாதிச் சான்றிதழின் மெய்த்தன்மையினை சரிபார்த்து வழங்குவது இத்துறையின் ஒரு முக்கிய பணியாகும்.

i. பழங்குடியினர்களுக்கான சாதி சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ii. அவர்கள் சான்று வழங்க மறுக்கும் பட்சத்தில், மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதன் மூலமும், அதன் பின்னரும் குறைகள் ஏதுமிருப்பின் மாநில கூர்ந்தாய்வு குழுவினையும் (SLSC) அணுகலாம்.

iii. பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாநில அளவில் கூர்நோக்குக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் விவரம் பின்வருமாறு:

## மாநில அளவிலான கூர்நோக்கு குழு

<table>
<tr><td>1</td><td>அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை</td><td>தலைவர்</td><td rowspan="3">பழங்குடியினர் என வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டக்கூறு 226–இன்படி உயர் நீதிமன்றத்திலும், கூறு 136–இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2</td><td>இயக்குநர், பழங்குடியினர் நலம்</td><td>உறுப்பினர் செயலர்</td></tr>
<tr><td>3</td><td>மானுடவியல் வல்லுநர்.</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

பழங்குடியினர்களின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிய கள ஆய்வு செய்து, சரிபார்த்து மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அறிக்கை அளிக்க ஏதுவாக நான்கு மண்டலங்களில் **கண்காணிப்பு பிரிவுகள்** செயல்பட்டு வருகின்றன. **சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை** ஆகியவை இந்நான்கு மண்டலங்களாகும். ஒவ்வொரு கண்காணிப்புப் பிரிவும் கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது :

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முதுநிலை காவல் துணை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | காவல் ஆய்வாளர் அல்லது சார் காவல் ஆய்வாளர் | 1 |
| 3. | தலைமைக் காவலர் | 1 |

பழங்குடியினர்களின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மை அறியும் பொருட்டு பல கோப்புகள் நிலுவையில் உள்ளதால், அரசாணை எண்.50, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள். 28.07.2017–இன்படி நான்கு மண்டல கண்காணிப்பு பிரிவுகளுடன், கூடுதல் காவல்துறை இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வரும் 38 சமூக நீதி மற்றும் மனித உரிமைப்பிரிவுகளும் (மாவட்டங்களில் **31** பிரிவுகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 7 பிரிவுகள்) அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கு உதவிபுரியும் வகையில் அரசாணை (ப) எண். 263, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்

26.10.2017–இன்படி 10 மானிடவியல் வல்லுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பழங்குடியினர்களின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மை அறிய மத்திய / மாநில அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களால் மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அனுப்பப்படும் கோரிக்கையினை சம்மந்தப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளருக்கு கள ஆய்வு மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு மாநில கூர்நோக்குக் குழு பரிந்துரை செய்யும்.

மாநில கூர்நோக்குக் குழுவில் ஆயிரக்கணக்கில் கோரிக்கைகள் நிலுவையில் உள்ளதால் கூடுதலாக 2 மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்களை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## 10. **பழங்குடியினர் துணைத் திட்டம்**

பழங்குடியினர் துணைத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்துணைத் திட்டத்தின்படி பழங்குடியினரின், சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென

மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்கள் தொகைக்கேற்ப 1.10 விழுக்காட்டிற்கு குறையாமல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாநில அளவில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும் (Nodal Department) இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும் (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளார். இத்துணைத் திட்டத்தை மாவட்ட அளவில் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

38 துறைகளை உள்ளடக்கிய 17 செயலாக்கத் துறைகள் வாயிலாகப் பழங்குடியினர் துணைத் திட்டம் பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாகச்

செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் (பழங்குடியினர் நலத் திட்ட செலவினம் – Expenditure on Scheduled Tribes Welfare) கீழ் 2018-19 ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான (மாநில நலத் திட்ட செலவினம் – Welfare Expenditure of State) ரூ.55498.16 கோடியில், ரூ.794.25 கோடி (1.43 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும் பழங்குடியின மக்கள் தொகை விழுக்காட்டை காட்டிலும் அதிகமாகும்.

# III. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

# (தாட்கோ)

## முன்னுரை

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 1974 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கு தீப்பிடிக்கா வீடுகள் கட்டுவதற்காக இந்திய நிறுவனச் சட்டம், 1956–இன் கீழ் துவங்கப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

## 1. பங்கு மூலதனம்

**1974**ஆம் ஆண்டு இக்கழகம் ரூ.1 கோடி பங்கு மூலதனத்துடன் நிறுவப்பட்டது. தற்போது இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ.150 கோடி மற்றும் ரூ.141.53 கோடி ஆகும். 1980ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட

மூலதனத்தை மாநில அரசும், மத்திய அரசும் 51:49 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன. பெரும் கடன் சுமையிலிருந்த இந்நிறுவனத்தை தமிழ்நாடு அரசு 2003-04 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரையிலான மாநில அரசின் பங்குத்தொகையாக ரூ.46.41 கோடி வழங்கியதன் மூலம் இக்கழகத்திற்குப் புத்துயிர் வழங்கியுள்ளது.

## 2. நோக்கம்

i. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

ii. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

iii. பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட உயர்தர கல்வி அளித்தல்

சமூக ஏணியின் அடித்தட்டில் மிக வறிய நிலையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரது பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு அரசு பல சீரிய முயற்சிகள் மேற்கொண்டாலும், ஆதி திராவிடர் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும்

அவர்களது வாழ்க்கைத் தரத்திற்குமிடையே உள்ள இடைவெளியானது மிகுந்தே காணப்படுகிறது. இவ்விடைவெளியினைக் குறைக்க பல்வேறு சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் ஓர் அங்கமாய், ஆதி திராவிடர் மக்களுக்கான, பல்வேறு பொருளாதார திட்டங்களின் கீழ் 2011-12 **ஆம் ஆண்டு வரை தனி நபருக்கு வழங்கிவந்த மானியத் தொகை ரூபாய் இருபத்தைந்தாயிரம் ரூ.**2.25 **இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.** இந்த மானியத் தொகை உயர்வானது ஆதி திராவிடர் மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

## 3. ஆதி திராவிடர்களுக்காக தாட்கோவினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1) நிலம் வாங்கும் திட்டம்
2) நில மேம்பாட்டுத் திட்டம்
3) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

4) தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் – பெட்ரோல், டீசல், மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான சிறப்புத் திட்டம்

5) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

6) இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார் தொழில்களுக்கான நிதியுதவித்திட்டம்

7) சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி

8) சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதாரக் கடன் உதவித் திட்டம்

9) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி

10) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதிஉதவி

11) இளம் சட்டப் பட்டதாரிகளுக்குச் சுயமாகத் தொழில் செய்வதற்காக நிதி உதவி

12) பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாக தொழில் புரிய நிதி உதவி

13) தாட்கோ தலைவர்/மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி

14) மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

15) துரித மின் இணைப்பு திட்டம்

16) தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆதி திராவிடர் மகளிருக்கு நிதியுதவித் திட்டம்.

## மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள்

### *(i) நிலம் வாங்கும் திட்டம்*

நில உடைமை சமூக நிலை உயர்வினை காட்டும் அளவு கோல் என்பதாலும், ஆதி திராவிடர் மக்களின் நில உடைமையினை அதிகரிக்கவும், அவர்களின் பெயரிலேயே வாங்க மகளிருக்கான சிறப்புத் திட்டமான நிலம் வாங்கும் திட்டம் 2004–05ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆதி திராவிடர் இனத்தை சேர்ந்த ஆண் மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- நிலம் ஆதி திராவிடர் பயனாளி பெயரில் பதிவு செய்யப்படுகிறது.

- அரசு இத்திட்டத்தின் கீழ் ரூ.1 இலட்சம் மதிப்புள்ள நிலத்திற்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து 100 விழுக்காடு விலக்கு அளித்துள்ளது.

- ஆதி திராவிடர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்படுகிறது.

### *(ii) நில மேம்பாட்டுத் திட்டம்*

நிலப் பயன்பாட்டை அதிகரிப்பதோடு, ஆழ்துளைக் கிணறு அமைத்தல் / திறந்தவெளிக் கிணறுகள், விசைக்கிணறுகள், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சுழற்சி முறை பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகளுக்காக வங்கி மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்குவதன் அடிப்படையில் வருமானம் ஈட்ட வழி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2018-19ஆம் நிதியாண்டில் 200 பயனாளிகளுக்கு மானியமாக ரூ.300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(iii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்*

ஆதி திராவிடர் மக்களின் வறிய நிலையைக் குறைக்க 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதி திராவிடர் பயன் பெறும் வகையில் அவர்களது கல்வித்தகுதியை கருத்தில் கொள்ளாமல் பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தனி நபர் மற்றும் குழுக்கள் பயன் பெறுகின்றனர்.

2018-19 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 5050 பயனாளிகளுக்கு, மானியம் வழங்கிட ரூ.6650 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(iv) தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் – பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான நிதியுதவி*

பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கும் இச்சிறப்புத் திட்டம் 2012-13 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதி திராவிடர் மக்கள், எண்ணெய் நிறுவனங்களின்

முகவர்களாக நியமனம் செய்ய விண்ணப்பிக்கும் பொழுதே ‘அ’ மற்றும் ‘ஆ’ வகைப்பாட்டில் (A & B Category) பெட்ரோல் / டீசல் / எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க உதவும் வகையில், தேவையான நிலம் வாங்குவதற்கும், வங்கி உத்தரவாதத்திற்குத் தேவையான வைப்புத்தொகைக்காகவும் நிதியுதவி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முகவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் நடப்பு மூலதனத்திற்காக (working capital) நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், எண்ணெய் நிறுவனத்தால் தெரிவு செய்யப்படும் முன்பும் அல்லது தெரிவு செய்யப்படும் பொழுதும் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2018–19 ஆம் நிதியாண்டில் 10 நபர்களுக்கு மானியம் வழங்கிட ரூ.22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(ப) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்*

படித்த வேலையற்ற 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆதிதிராவிடர் இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த / விருப்பமான தொழில் செய்ய நிதி உதவி, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

2018-19 ஆம் நிதியாண்டில் 3253 நபர்களுக்கு மானியம் வழங்கிட ரூ.3740 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***(vi) இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம்***

இத்திட்டத்தின் கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS), இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ மையம் / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013-14ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மருத்துவம்சார் தொழிற்கல்வி பயின்ற முட நீக்கு வல்லுனர், மருந்தாளுனர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் சொந்தமாக மருத்துவ மையம் / கண் கண்ணாடி கடை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் சம்மந்தப்பட்ட மன்றத்தில் (concerned council) பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2018–19 ஆம் நிதியாண்டில் 50 நபர்களுக்கு மானியமாக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(vii) சுய உதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி*

குறுசிறு தொழில் நிறுவனங்களை முன்னேற்ற வறுமை ஒழிப்பு நோக்கோடு, ஆதிதிராவிடரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. 2012-13 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிடர் குழுக்களுக்கு ஒரு முறை மானியமாக ரூ.25,000/- வழங்கப்படும். வங்கிகள் ரூ.50,000/- கடனுதவி வழங்கும். இத்தொகை குழுவின் கட்டமைப்பு நிதியினை மேம்படுத்த பயன்படுத்தப்படும்.

2018-19 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 4500 குழு உறுப்பினர்கள் பயன்பெற 300 குழுக்களுக்கு மானியமாக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(viii) சுய உதவிக் குழுக்களுக்கானப் பொருளாதார கடன் உதவித் திட்டம்*

இத்திட்டத்தின் கீழ், ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களது பொருளாதார ஆளுகையை

மேம்படுத்த குறைந்த வட்டியுடன் தேவையான நிதியுதவி வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்ய வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் சுய உதவிக் குழுக்கள் இருமுறை தரநிர்ணயம் செய்யப்பட்ட பின்பு, தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக போதுமான மற்றும் சரியான நேரத்தில், நியாயமான வட்டிக்கு கடன் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினைச் செய்வதற்கு திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் 50 விழுக்காடு திட்டத்தொகை அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2018-19 ஆம் நிதியாண்டில் 5750 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற 350 குழுக்களுக்கு மானியமாக ரூ.800 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனைத்துத் திட்டங்களிலும் பயன் பெறுபவர்கள் ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். தாட்கோ மூலம் முன் முடிவடைந்த மானியமாக விடுவிக்கப்படும்.

## முழு மானிய உதவித்திட்டங்கள்

தாட்கோ, வருமானம் ஈட்டும் தொழில்களுக்கு கடன் மற்றும் மானிய உதவி வழங்குவதோடு மட்டுமல்லாமல், குடிமைப்பணி மற்றும் தங்களது தொழிலை ஏற்படுத்த ஆர்வமுள்ள ஆதி திராவிடர் இளைஞர்களுக்கும், வேறு எந்த திட்டங்களிலும் உதவிபெறாதவரும் மானியம் பெற தகுதியுடையவர் என கருதும் நபர்களுக்கும் 100 விழுக்காடு மானியம் வழங்குகிறது.

### *(i) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி*

இந்திய குடிமைப் பணியில் ஆர்வம் கொண்ட ஆதி திராவிடர் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்விற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள (Main Examinations) 2012-13 ஆம் ஆண்டிலிருந்து ரூ.50,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018-19 ஆம் ஆண்டில் 100 நபர்கள் பயன்பெறும் வகையில் மானியமாக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதியுதவி*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் தொகுதி-1 தேர்வு மாநில அளவிலான உயர்ந்த குடிமைப் பணி தேர்வாகும். இந்தத் தேர்வு எழுதும் ஆதி திராவிடர் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டம் 2013-14-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு தலா ரூ.50,000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018-19 ஆம் ஆண்டில் 50 நபர்கள் பயன்பெறும் வகையில் மானியமாக ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(iii) இளம் சட்டப் பட்டதாரிகளுக்குச் சுயமாக தொழில் செய்வதற்காக நிதியுதவி*

தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம், நிகர் நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் சட்டப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற சட்டக் கல்லூரிகளில் முறையான பாடத்திட்டத்தில் பயின்ற, 21 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட இந்திய பார் கவுன்சில் மற்றும் மாநில பார் கவுன்சிலில் பதிவு

பெற்ற சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில் துவங்க இத்திட்டத்தின் கீழ் ரூ.50,000/– நிதியுதவி ஒரு முறை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018–19 ஆம் நிதியாண்டில் 500 நபர்கள் பயன்பெறும் வகையில் மானியமாக ரூ.250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(iv) பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில்புரிய நிதி உதவி*

பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிப்பதற்காக தலா ரூ.50,000/– மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம், 2013-14–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018-19-ஆம் நிதியாண்டில் 10 பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர்களுக்கு மானியமாக ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(v) தாட்கோ தலைவர் / மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி*

2016-17-இல் அறிமுகப்படுத்தப்பட்ட தாட்கோ தலைவர் விருப்புரிமை திட்டத்தின் கீழ், ரூ.30,000/–

நிதியுதவி வழங்கப்படுகிறது. 2012-13–இல் அறிமுகப்படுத்தப்பட்ட மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை திட்டத்தின் கீழ் ரூ.40,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது. அவசரகால நிவாரணம் வழங்குவதற்காக இத்திட்டத்திற்கு ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விதவைகள், மாற்றுத் திறனாளிகள், பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகள், நலிந்த கலைஞர்கள், மருத்துவம் செய்ய இயலாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், திறன் மேம்பாட்டு படிப்பு, ஆரம்ப கல்வி முதல் தொழிற்கல்வி வரை தொடர்வதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி உதவிகள், சாதிக் கலவரம் / தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் தகுதி வாய்ந்தவர்களுக்கு தேவைக்கேற்ற உதவி, நடைமுறை விதிகளுக்குட்பட்டு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018-19-ஆம் ஆண்டு 400 நபர்கள் பயன்பெறும் வகையில் மானியமாக ரூ.140 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(vi) மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி*

மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், நலிந்த கலைஞர்கள், **30** வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களால் தகுதியானவர்கள் என கண்டறியப்படுபவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒருவருக்கு ரூ.20,000/– வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018-19-ஆம் நிதியாண்டில் 280 நபர்கள் பயன்பெறும் வகையில் மானியமாக ரூ.56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *(vii) துரித மின் இணைப்புத் திட்டம்*

ஆதி திராவிடர் விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற ஒரு நபருக்கு ரூபாய் 10,000/- மின்வாரிய வைப்பு தொகையாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும் இத்திட்டம் 2007-08 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்தொகை, 2016-17 முதல் நபர் ஒருவருக்கு ரூபாய் 75,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018-19-ஆம் நிதியாண்டில் 1000 நபர்கள் பயன்பெற மானியமாக ரூ.750 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ***(viii) தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆதி திராவிடர் மகளிருக்கு நிதியுதவி***

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கேற்ப, சமூக நல இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள ஆதி திராவிடர் மகளிருக்கு நவீன தையல் இயந்திரம் வாங்க நிதியுதவி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பயனாளிக்கும் தையல் இயந்திர விலையில் 30 விழுக்காடு மானியமாகவும், எஞ்சிய 70 விழுக்காடு சிறப்பு மைய நிதியுதவியிலிருந்து 4 விழுக்காடு வட்டியில் சுலபக்கடனாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018–19–ஆம் ஆண்டு 5194 நபர்கள் பயன்பெறும் வகையில் மானியமாக ரூ.207 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தகுதியான வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், வேலை போட்டிகளுக்கேற்ப அவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு / சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திட இப்பயிற்சிகள் மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் 10 விழுக்காடு நிதியினைக் கொண்டு வழங்கப்படுகின்றன.

### தாட்கோ மூலம் நடத்தப்படும் முக்கியமான பயிற்சிகள்

- மல்டிமீடியா & அனிமேஷன் *(Multimedia & Animation)*
- கட்டடக் கலை மற்றும் ஆட்டோ கேட் உடன் இணைந்த கட்டட 2D வரைகலை *(Architectural & Civil 2D Drafting with AutoCAD)*
- நவீன ஆடை தொழில்நுட்பம் *(Fashion Technology)*
- ஆடை வடிவமைப்பு *(Apparel Pattern Making)*

- அழகுக் கலை பயிற்சி *(Beautician)*
- முடி ஒப்பனையாளர் பயிற்சி *(Hair Stylist)*
- குளிர்சாதனப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு *(Repair & Maintenance of A/C)*
- மின் வினைஞர் *(Electrician)*
- துணி வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி *(Cutting & Tailoring)*
- கணினி வன்பொருள் மற்றும் இணைவமைவு *(Computer Hardware & Networking)*
- சில்லறை விற்பனை மேலாண்மை *(Retail Management)*
- பொறியாளர் பயிற்சி *(Engineer Training)*
- கட்டமைப்பு பொறியியலாளர் *(Infrastructure Engineer)*
- தொலைத் தொடர்பு மேலாண்மை *(Telecom management)*
- சூரிய மின் நிறுவி மற்றும் சேவை அளிப்பவர் *(Solar Electric installer & Service Provider)*

- சுற்றுலா ஏஜென்ட் மற்றும் போக்குவரத்து பயண நடத்துனர் பயிற்சி *(Tour Agent & Travel operator)*
- கணக்காளர் *(Accountant)*
- பயணச்சீட்டு முன்பதிவு *(Ticket Reservation)*
- கை எம்ப்ராய்டரி *(Hand Embroidery)*
- பிளாஸ்டிக் செயல்முறை *(Plastic Processing)*
- ஊசி மோல்டிங் *(Injection Moulding)*
- பிளவு மோல்டிங் *(Blow Moulding)*
- இயந்திரம் இயக்குபவர் பயிற்சி *(Machine Operator)*

**2013–14** ஆம் ஆண்டு முதல் **2017–18** வரை ரூ.**40.37** கோடி செலவில் **100** நிறுவனங்கள் மூலம் **25,681** நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

## 5. பழங்குடியினருக்காகச் செயல்படுத்தப்படும் நிதியுதவித் திட்டங்கள்

பழங்குடியினருக்காக பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோவால் 2012-13 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1) நிலம் வாங்கும் திட்டம்

2) நில மேம்பாட்டுத் திட்டம்

3) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

4) பழங்குடி இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் (இலகுரக பயணியர் வாகனம்/ஈப்பு/கனரக வாகனம்/இதர தொழில்கள்)

5) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி

6) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதாரக் கடன்

7) தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பழங்குடியின மகளிருக்கு நிதியுதவி

8) இந்திய குடிமைப்பணி/தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி–1 முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

**9)** துரித மின் இணைப்பு திட்டம்

***(i) நிலம் வாங்கும் திட்டம்***

நில உடைமை மகளிரது சமூக நிலையை உயர்த்தும் அளவுகோல் என்பதால் பழங்குடியின மகளிர், இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்குவது

ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்ச திட்டத் தொகையான ரூ.7.50 இலட்சத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் அல்லாதவர்களிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு நடைமுறையில் உள்ளது.

### *(ii) நில மேம்பாட்டுத் திட்டம்*

பழங்குடியினர் தங்கள் நிலத்தை மேம்படுத்த நீராதாரங்களை உருவாக்குதல், பாசன வசதிகள் மற்றும் பாசனத்திற்காக மின்சார இணைப்புகள் அமைத்தல் உள்ளிட்ட நில மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இத்திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்படுகிறது. அதிகபட்ச நிதியுதவியாக ரூ.7.50 இலட்சம் மானியத்துடன் வழங்கப்படுகிறது.

### *(iii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP)*

இத்திட்டத்தின் வாயிலாகப் பழங்குடியினர் தங்களது சமூக, பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில் வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களுக்கு

கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச திட்டத்தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். திட்டத்தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் வரை மானியமாக நபர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

### *(iv) பழங்குடி இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்*

இத்திட்டத்தில் ஓட்டுனர் உரிமம் வைத்துள்ள பழங்குடி இளைஞர்களுக்கு பயணியர் வாகனம் / ஈப்பு வாங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிக பட்சமாக ரூ.4 இலட்சம் வரை மானியமும், கனரக வாகனத்திற்கு ரூ.5.50 இலட்சம் மானியமும் வழங்கப்படுகிறது.

### *(v) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி*

இத்திட்டத்தின் கீழ் ரூ.25,000/– மட்டும் ஒரு முறை மானியம் சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. சுய உதவிக்

குழுக்களின் கட்டமைப்பு நிதியினை மேம்படுத்த இந்நிதியுதவி பயன்படுத்தப்படுகிறது.

### *(vi) மகளிர் குழுக்களுக்கான பொருளாதாரக் கடன்*

பழங்குடியின மகளிரை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள் செய்தல், தோட்டக்கலை, பூஞ்செடிகள் வளர்த்தல், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டி மற்றும் பிற கடைகள் அமைத்தல், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சார்ந்த தொழில்கள் செய்ய நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படுகிறது.

### *(vii) தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பழங்குடியின மகளிருக்கு நிதியுதவி*

சமூக நல இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தையல் கூட்டுறவுச் சங்கங்களின் பழங்குடியின மகளிர் உறுப்பினர்களுக்கு நவீன தையல் இயந்திரம் வாங்கிட நிதியுதவி அளிக்கப்படுகிறது. பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திர விலையில் 30 விழுக்காடு மானியமாக பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழும், எஞ்சிய 70 விழுக்காடு சுலப கடனாக தாட்கோ பங்கு மூலதனத்திலிருந்தும் 4 விழுக்காடு வட்டி வீதத்தில் வழங்கப்படுகிறது.

### *(viii) இந்திய குடிமைப்பணி/தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி–1 முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-1 தேர்வு மாநில அளவிலான உயர்ந்த குடிமைப் பணி தேர்வாகும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி–1 முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மை தேர்வு மற்றும் இந்திய குடிமைப்பணி முதன்மைத்தேர்வு (Main Exam)

எழுதும் பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2015-16 ஆம் ஆண்டு முதல் ரூ.50,000/– நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### *(ix) துரித மின் இணைப்பு திட்டம்*

பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற நபர் ஒருவருக்கு ரூபாய் 75,000/- மின்வாரிய வைப்புத் தொகையாக செலுத்திட 2017-18-ஆம் ஆண்டு முதல் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

## 6. கட்டுமானப் பிரிவு

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு பள்ளிக் கட்டடங்கள், பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக் கட்டடங்கள், சமுதாய நலக் கூடங்கள் முதலிய கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள், ஆதி திராவிடர் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளின் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

## (i) மைய அரசுப் பணிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணாக்கருக்கான விடுதிக் கட்டடங்கள், ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள், வனபந்து கல்யாண் யோஜனா திட்டத்தின் கீழ் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டுதல் முதலிய பணிகள் மைய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## (ii) மாநில அரசுப்பணிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், வகுப்பறைகள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள், சுற்றுச் சுவர்கள், சமுதாய நலக்கூடங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டுமானம், தார் சாலைகள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், பழங்குடியினர் விடுதிகளை பராமரித்தல் மற்றும் பழுது நீக்குதல் போன்ற பணிகள் மாநில அரசுத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

## iii) நபார்டு திட்டப் பணிகள்:

ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் (RIDF) XXI, XXII மற்றும் XXIII திட்டங்களின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், அடிப்படை வசதிகளான சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி, கழிவறைக் கூடம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கென புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தாட்கோவின் கட்டுமானப் பிரிவு ரூ.314.02 கோடி மதிப்பில் பல்வேறு திட்டங்களின் கீழ் 833 பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

## IV. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2018-2019 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 8.79 | 0 | 8.79 |
| 2 | ஆதி திராவிடர் நலத்துறை | 3094.31 | 112.73 | 3207.04 |
| 3 | பழங்குடியினர் நலத்துறை | 305.80 | 28.02 | 333.82 |
| **மொத்தம்** | | **3408.90** | **140.75** | **3549.65** |

**வி.எம். ராஜலெட்சுமி**
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை அமைச்சர்